**SHANMUGA INDUSTRIES ARTS AND SCIENCE COLLEGE (Co-Ed.,)**
Certified under Section 2(f) & 12B of the UGC Act 1956
An ISO 9001: 2000 Certificated Institution
Permanently Affiliated to Thiruvalluvar University,
Vellore and Approved by the Government of Tamil Nadu & AICTE

Manalurpet Road, Tiruvannamalai – 606 603, Phone: 04175 – 236654, 235295
Email: shanmugacollege@gmail.com, Facebook: www.facebook.com/shanmugacollege
Website: www.shanmugacollege.edu.in

நூலகத்தைப் பயன்படுத்தினால் வாழ்க்கையில் உயரலாம், நூலக உறுப்பினர் சேர்க்கை விழாவில் சண்முகா கல்லூரியின் செயலர் பேச்சு

சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில், கல்லூரி மாணவர்களைத் திருவண்ணாமலை மாவட்ட மைய நூலக உறுப்பினராகச் சேர்க்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட நூலக அலுவலர் **இரா. சண்முகநாதன்** சிறப்புரையாற்றினார். கல்விப்புல முதன்மையர் பேராசிரியர் **அழ. உடையப்பன்,** நல்நூலகர்கள் **சாயிராம், வெங்கடேசன், கிருஷ்ணன்,** வாசகர் வட்டத் தலைவர் **வாசுதேவன்** உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரியின் பொருளாளர் **எஸ். பாபு** நன்றியுரையாற்றினார். முன்னதாக முதல்வர் முனைவர் **கே. ஆனந்தராஜ்** வரவேற்புரையாற்றினார். தமிழ்ப் பேராசிரியர் **இரா.சங்கர்** நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் **சீனி. கார்த்திகேயன்** தலைமையுரையாற்றினார். அவ்வுரையில் பேரறிஞர் அண்ணா முதலிய மிகப் பெரிய தலைவர்களும் கல்வியாளர்களும் சாதனையாளர்களும் நூலகத்தைப் பயன்படுத்தியே வந்துள்ளனர். நீங்களும் நூலகத்தைப் பயன்படுத்தி போட்டித் தேர்வுகளை எதிர்கொள்வதோடு தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று எடுத்துக் கூறினார்.

இவ்விழாவில் 1165 மாணவ, மாணவியர் நூலக உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டனர். மாவட்ட மைய நூலகத்தோடு இணைந்து நடத்தப்பட்ட நிகழ்ச்சியில் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், நூலக அலுவலர்கள், மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்

தாளாளர்


சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல்
பல்கலைக்கழக மானியக்குழுவின்
12B அங்கீகாரம் பெற்ற கல்லூரி,
திருவள்ளுவர் பல்கலைக்கழக நிரந்தர
(ISO 9001 : 2008 தரச்சான்று பெற்றது)
606 603.
மைய


சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல்
திருவண்ணாமலை மாவட்ட மைய நூலகம்
நூலக உறுப்பினர் சேர்க்கை
நாள் : 20.09.2018 செவ்வாய்க்கிழமை, இடம்: கருத்தரங்க அறை


சண்முகா தொழிற்சாலை கலை


சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி
திருவண்ணாமலை மாவட்ட மைய நூலகம்
உறுப்பினர் சேர்க்கை விழா
நாள் : 20.09.2016 செவ்வாய்க்கிழமை, இடம்: கருத்தரங்க அறை